# தமிழ் ராஜ்யம்

சி. பா. ஆதித்தன், எம். எ., பார்-அட்-லா.



" சூரத் துணிவொடுகில்;—தமிழா
சொந்த உரிமையை வெல்! "

—சுத்தானந்தர்

38
01

இரண்டாம் பதிப்பு. ] 1942. [ ஒரு அணா.

# தமிழ்க் கொடி.

முன் பக்கத்தில் காட்டியிருக்கும் கொடியே தமிழ்க் கொடி. தமிழ் மன்னர்களாகிய சேர, சோழ, பாண்டியர்கள் ஏற்படுத்திய வில், புலி, மீன் கொடி. இக்காலத்தில் தமிழ்ப்படைக்குஏற்ற கொடியும் இதுவே. வில்லில் இருந்து விடுபடும் அம்பு போல் ஆகாயத்திலும், புலிபோல் தரையிலும், மீன் போல் கடலிலும் தமிழ் வீரர்கள் பாய்வார்கள் என்பதைக் குறிக்கிறது. தமிழ்ப் படை மூன்று பகுதிகளாக, அதாவது ஆகாயப் படை, தரைப்படை, கடற்படை என்று மூன்ருக இருக்கும் என்பதையும் காட்டுகிறது.

**தமிழ்க் கொடியை வணங்கு.**

இசை: "தாயின் மணிக்கொடி பாரீர்"

செந்தமிழ்த் தாய்க்கொடி பாரீர்! — அதைச்
சேர்ந்து பணிந்து செழித்திட வாரீர்! (செந்)

இமயம் வளர்ந்தபின் கூட — அதில்
ஏறிப் பறந்தது எந்தமிழ்க் கொடியே!
அமர்குறித் தாடிய வடவர் — பெட்டி
அரவென அடங்கினர் அக்கொடி முன்னே! (செந்)

(சங்கராபரணம்.)

தமிழ் எங்கள் அயர்வுக்கு வாள்!—இன்பத்
தமிழ் எங்கள் உயர்வுக்கு வானுயர்தோள்!
தமிழ் எங்கள் வெற்றிக்குத் தூண்!—உயர்
தமிழ் எங்கள் வாழ்க்கையில் ஊக்கிடும் நாண்!

# தமிழ் ராஜ்யம்.

## வேண்டும் விடுதலை !

தமிழ் நாட்டிலேயே வருஷ முழுவதும் வசிக்கும் தமிழனைவிட வெளி நாட்டில் வசிக்கும் தமிழனுக்குத் தமிழ் நாட்டின்மேல், தாய்நாட்டு அன்பும் தமிழன் என்ற ஆர்வமும் அதிகமென்று சொல்லக்கேட்டிருக்கிறேன். இது உண்மையா, இல்லையா என்பதைப்பற்றி எனக்குக் கவலை இல்லை.

ஆனல், பல வருஷங்களாய் வேறு நாடுகளில் குடியிருந்து விட்டு, தாய் நாடு திரும்பியவுடன் நான் கண்ட காட்சி என்னவென்று கேளுங்கள். பட்டப் பகலிலே ஓர் ஏழைத் தமிழனை முண்டாசு கட்டிய ஒரு வடநாட்டான் தன் கொழுத்த கையினுல் அடித்தான். (தமிழனை மீட்டபின்), இந்தக் காட்சியைப் பார்த்துக்கொண்டு சும்மா நின்ற தமிழன் ஒருவனை "ஏன் ஐயா சும்மா நின்ருய்? நீ தமிழன் தானே!" என்று நான் கேட்டதற்கு, "நான் இந்தியன்" என்று பதில் சொன்ஞன். இது நடந்தது தமிழ் நாட்டில். வடநாட்டான் தன் ஊரில் பிழைப்பில்லாமல் தமிழ் நாட்டிற்கு வந்து இந்த நாட்டைச் சுரண்டிப் பணம் சேர்த்து முதலாளியாகக் கடைத்தெருவில் கடை வைத்திருப்பவன்.

இந்தக் காட்சியைப் பார்த்துவிட்டு வீடுசேர்ந்ததும், என் தலை சுழன்றது. சிங்கப்பூரில் தமிழன் ஒருவனை மலாய்காரன் கைநீட்டி அடித்த குற்றத்திற்காகத் தமிழரனைவரும் ஒன்று சேர்ந்து, மலாய்காரனை அந்த இடத்திலேயே அடித்துத் தண்டித்தது என் ஞாபகத்திற்கு வந்தது. இங்கேயோ, தமிழன் சுரணையற்று இந்தியாக்காரன் என்று சொல்லிக்கொண்டு சும்மா இருக்கிருன். முன்காலத்தில் வடநாட்டாரை அடி பணிய வைத்து, தமிழ்க்கொடியை இமயமலையில் ஏற்றிஞர்களே தமிழர்கள்! தமிழ் மன்னர்கள் ஆண்ட தமிழ் நாடு தாஞ இது?

தமிழருக்கு அடியவன் என்று சொல்லிக்கொள்ளும் நான் இப்படிப் பட்ட தமிழனுக்கா அடியவன்? தமிழன் மானம் போகப் பார்த்திருக்கும் தமிழனுக்கா நான் ஊழியன்? தமிழர் கூடும் கூட்டத்தில் தெய்வத்தின் நிழல் தோன்று மென்பார்களே! இன்று நான் கண்ட காட்சியில் தமிழர் கூட்டம் சீர்குலைந்த கூட்டமாகவல்லவா தோன்றியது? நான் தமிழ் மொழியின் தொனியில் தெய்வத்தின் தொனியைக் கேட்பவனுயிற்றே! அதே மொழியில் ஒருவன் தன் கோழைத்தனத்தை மறைப்பதற்குத் தான் ஒரு இந்தியாக்காரன் என்று சொல்லவும் ஆயிற்றே!

எங்கு பார்த்தாலும் அன்னியர் மோகம். தமிழ் நாட்டில் அன்னியர் கூட்டம் பெருத்துப் போயிற்று. வேண்டும் விடுதலை! வடநாட்டானுக்கு வேண்டியது ஒரே விடுதலை, தமிழருக்கு வேண்டியது இரட்டை விடுதலை: வட நாட்டாரிடமிருந்தும், பிற நாட்டாரிடமிருந்தும்.

## துண்டுபட்ட தமிழ் நாடு.

1939ம் வருஷத்திலிருந்து கவர்மெண்டார் ஓர் புதிய பாடதிட்டத்தைத் தமிழ் நாட்டு ஆரம்ப பாடசாலைகளில் புகுத்தியிருக்கிறார்கள். அத்திட்டத்தின்படி பல தமிழ்ப் புத்தகங்கள் எழுதப்பட்டு 8, 9, 10 வயதுள்ள சிறு தமிழ்ப் பிள்ளைகளுக்குக் கற்பிக்கப்பட்டு வருகின்றன. அவைகளில் ஒன்றாவது தமிழ் நாட்டு ஆர்வமும், தமிழ் என்ற உணர்ச்சியும் கொடுக்கக் கூடியதாய் இல்லை.

தமிழ் நாட்டின்மேல் சிறு பிள்ளைகளுக்குப் பக்தி உணர்ச்சி குறைய வேண்டுமென்ற ஒரே நோக்கத்துடன் அந்தப் புத்தகங்கள் எழுதப்பட்டிருப்பனபோல் தெரிகிறது. தமிழ் நாடு முழுவதிலும் ஆரம்ப பாடசாலைகளில் சொல்லிக்கொடுக்கப்படும் பூகோள சாஸ்திரம் இதோ என் கையில் இருக்கிறது. அதில் தமிழ் நாட்டைப்பற்றி ஏதாவது சொல்லியிருக்கிறதா? இல்லை என்ன எழுதியிருக்கிறது பாருங்கள்.

"நாம் வசிக்கும் தேசத்திற்கு இந்தியா என்று பெயர். இதன் தென் பாகமாகிய தென்னிந்தியாவில் சென்னை மாகாணத்தில் நாம் வசிக்கிறோம்......".

நாம் வசிக்கும் நாடு தமிழ் நாடு என்று சொல்லிக்கொடுத்தாலென்ன? நம் தமிழ் நாடு இப்போது பல துண்டுகளாகச் சிதைந்துகிடக்கின்றது என்ற உண்மையைச் சொல்லிக் கொடுக்கக் கூடாதா?

இந்தியாவைத் துண்டு போடக் கூடாது என்று சொல்லும் "தேச பக்தர்கள்" தமிழ் நாடு என்ன நிலையில் இருக்கிறது என்று நினைத்துப் பார்த்ததுண்டா? இந்தப் புத்தகத்தில் அச்சிட்டிருக்கும் படத்தைப் பாருங்கள். அது தமிழ் நாட்டின் படம். அது தமிழர்கள் வசிக்கும் இடத்தை, அதாவது தமிழர்கள் தங்கள் சொந்தத் தாய் நாடு என்று கருதுமிடத்தைக் காட்டுகிறது. தமிழ் நாட்டை இன்றையதினம் எத்தனை பேர்கள் கூறுபோட்டுக் கொண்டிருக்கிறார்கள் பாருங்கள்.

## பெரும் பாவம் எது?




படத்தில் 1 என்று காட்டப்பட்டிருப்பது காரைக்கால், பாண்டிச்சேரிப் பிரதேசங்கள். இப்பிரதேசங்களில் வசிப்பவர்கள் எல்லாரும் தமிழர்கள். இருந்தாலும் இந்த இடங்களை ஆளுவது தமிழர்கள் இல்லை. பிரஞ்சுக்காரர்கள். படத்தைப் பார்த்தால் இந்தப் பிரதேசங்கள் தமிழன்னையின் வயிற்

றைக் கடித்துக் கொண்டிருக்கும் இரண்டு உண்ணிகள் போல் காண்கின்றன.

படத்தில் 2 என்று இலக்கமிட்டிருப்பது கன்னியாகுமரிப் பிரதேசம். இப்பிரதேசம் தென் திருவிதாங்கூர் என்னும் பெயருடன் மலையாளத்தார் ஆதிக்கத்தில் இருக்கிறது. தொன்று தொட்டுத் தமிழ் நாட்டின் தென் எல்லையாய் இருந்தது கன்னியாகுமரி. தமிழ்க் கவிகளின் உள்ளத்தைக் கொள்ளைகொண்ட குமரிமுனை தமிழ் நாட்டை விட்டுப் பிரிந்து கிடக்கிறது. கன்னியாகுமரியிலும் அதைச்சேர்ந்த வட்டாரத்திலும் வசிப்பவர்கள் சுத்தத் தமிழர்கள். தங்களுக்கு மலையாளத்துப் பாஷையில் பள்ளிக்கூடங்கள் வேண்டாமென்றும் தமிழ்ப் பள்ளிக்கூடங்களே வேண்டுமென்றும் கிளர்ச்சிசெய்து வருகிறார்கள்.

அடுத்தபடியாக 3 என்று இலக்கமிட்ட யாழ்ப்பாணத்தைப் பாருங்கள். தாயை இழந்த கன்றுபோல் தனியாகக் கிடக்கிறது. யாழ்ப்பாணத்திலும் வடஇலங்கையிலும் வசிப்பவர்கள் எல்லாரும் தமிழர்கள். தமிழில் ஆர்வம் உள்ளவர்கள். உயிரையும் கொடுத்துத் தமிழைப் பேணுபவர்கள், கன்னியாகுமரியின் வழியாய் படத்தில் கிழக்கு மேற்கான கோடு ஒன்று இழுத்துப் பார்த்தால் அதற்கு வடக்கேயிருக்கிறது யாழ்ப்பாணமும் அதைச்சேர்ந்த தமிழ்ப் பிரதேசமும். இது விதி வசத்தாலும் அன்னியர்களின் சூழ்ச்சியினாலும் தமிழகத்தை விட்டுப் பிரிந்து சிங்களவர் ஆதிக்கத்தில் இலங்கையுடன் சேர்ந்து கிடக்கிறது.

இப்படிக் கை வேறு கால் வேறாகக்கிடக்கும் தமிழ் நாட்டின் முண்டம் (படத்தில் 4 என்று இலக்கமிட்டிருக்கும் பகுதி) சென்னை ராஜதானியின் தென்பாகம் என்று சொல்லப்பட்டு வருகிறது. இவ்வாறு துண்டு பட்டுக் கிடக்கும் தமிழ் நாட்டை ஒன்று சேர்ப்பதும், உயிர்ப்பித்துத் தமிழ் ராஜ்யமாக்குவதும், அந்த ராஜ்யதைப் பிறநாட்டாரும் வணங்கும் ஓர் வல்லரசாக்குவதும் தமிழரின் கடமையல்லவா?

நாம் வசிப்பது ஆசியாவின் ஒரு பாகமென்றோ, இந்தியாவின் ஒரு பாகமென்றோ, சிறு குழந்தைகளுக்குச் சொல்லிக் கொடுத்துவிட்டு, தமிழ் நாடு துண்டிக்கப்பட்டுக் கிடக்கும் தற்கால நிலைமையை விளக்காமல் இருப்பது, உண்மையைத் திரைபோட்டு மறைப்பதற்குச் சமானம். பிள்ளைகளின் மனதில் வெளிச்சத்தைக் காட்டாமல், வேண்டுமென்றே இருளைப் படியவைத்து வருவது அநியாயம். இந்தியாவைத் துண்டிப்பது பாவமென்று வட நாட்டார் சொல்லுவதைக் கேட்டுத் தலையசைக்கும் தமிழன், தன் தமிழ் நாடு துண்டுபட்டுக் கிடப்பதை இன்னும் பார்த்துக்கொண்டு சும்மா இருப்பது பெரும் பாவமில்லையா?

## சுரண்டல்காரர்கள்.

தமிழ் நாட்டு மக்கள் வறுமையினால் படும் துயரம் அளவிடமுடியாதது. தமிழ் நாட்டைப் பிடுங்கித் தின்னவரும் வடநாட்டான் நெஞ்சையும், அன்னியன் நெஞ்சையும் தவிர மற்றெல்லோர் நெஞ்சையும்

க்ரைக்கக்கூடிய ஏழ்மைத்தனத்தை நம்மக்கள் அடைந்துவிட்டார்கள்.

வட நாட்டான் தன் நாட்டைப் பரங்கியர்கள் சுரண்டுகிறார்கள் என்று சொல்லுகிறான். தமிழ் நாட்டையோ, பரங்கியர்களும்,வடநாட்டாரும் சுரண்டுகிறார்கள். வருஷா வருஷம் சுங்க வரியாகக் கொடுக்கும் 6 கோடி ரூபாய் படைக்காகவென்று தமிழ் நாட்டினின்று சுமார் 1500 மைலுக்கு வடக்கே, வடநாட்டில் செலவிடப்பட்டு வட நாட்டாரையும், பரங்கியர்களையும் சேருகிறது.

தமிழ் ராஜ்யம் ஏற்பட்டுத் தமிழ்ச்சேனையும் ஏற்பட்டால் அப்படையில் தளகர்த்தர்களாக இருக்கக்கூடிய பலமும் தைரியமும் உள்ள தமிழர்கள் இருக்கிறார்கள்; அவர்கள் இப்போது கிராமாந்தரங்களில் சாப்பாட்டிற்கும் இல்லாமல் தவிக்கிறார்கள்.

வடநாட்டானின் சுரண்டல், பரங்கியரின் சுரண்டலைவிட எவ்வகையிலும் குறைந்ததில்லை. பகல் கொள்ளைக்கு சமானமாகச் சொல்லலாம். தமிழ் நாட்டிலிருந்து வெகு தூரத்திலுள்ள வட நாட்டான் தன் நாட்டுத் தொழிற்சாலைகளில் வட நாட்டு ஆட்களைக்கொண்டு உற்பத்தி செய்த சாமான்களை (உதாரணமாக சைக்கிள்களை) இங்கே கொண்டு வந்து, நம் முதுகில், "நாம் எல்லாம் இந்தியாக்காரர்கள் அல்லவா, இது இந்தியாவில் செய்யப்பட்டது" என்று சொல்லித் தட்டுகிறான். நாமும் பையைத்திறந்து ரூபாயை எண்ணிக் கொடுத்து விடுகிறோம். ரூபாய் எண்பதோ, தொண்ணூறோ போய்விடுகிறது 1000 மைலுக்கு அப்பால்.

பஞ்சாப்காரன் செய்த பந்தடி மட்டையை வாங்குவதால் தமிழ் நாட்டுக்கு என்ன லாபம்? பஞ்சாபிலுள்ள தொழிலாளருக்குக் கூலி கிடைத்தால் தமிழன் வயிறு எப்படி நிறையும்?

"நாம் எல்லோரும் ஒரு நாட்டாரல்லவா" என்று சொல்லிக்கொண்டு கிட்டவரும் குஜராத்திக்காரனையும், "நாம் எல்லோரும் ஆசியாக்காரர் அல்லவா" என்று சொல்லிக்கொண் வரும் ஜப்பான் காரனையும், "மனி குலம் ஒன்று" என்று சொல் கொண்டுவரும் பரங்கியரையும் நம வேண்டாம்.

தமிழ் நாட்டில் தமிழர்கள் செய் சாமான்களையே ஆதரியுங்கள். தமி நாட்டில் எங்கு பார்த்தாலும் வ நாட்டு சுரண்டல்காரர்கள் கடைக பெருகிவிட்டன. அவைகளை வி மென்று வெறுங்கள்.

## வறுமை நோய்க்கு மருந்து.

ஒரு சாதாரணத் தமிழனின் ச சரி வரும்படி மாதத்திற்கு ரூபாய் என்று கணக்கிடப்பட்டிருக்கிற இதைக் கொண்டு அவன் உண்பதெ படி? உடுப்பதெப்படி? நோய் வந்தா மருந்து வாங்குவது எப்படி? வய காலத்திற்குச் சேமித்து வைப்பதெ படி? வேலையே கிடைக்காமல் நூ றுக்கு முப்பது பேர் அலைகிறார்கள். அவர்கள் என்ன செய்வார்கள்?

தமிழ் ராஜ்யம் வந்தால் இந்த நிலைமையை உடனே மாற்றலாம். காங்

கிரஸ் ஆட்சியில் கதரைப் பெருக்கி னார்கள். வறுமை நோய் தீர்ந்தபாடில்லை. வறுமைக்கு மருந்து, ராட்டினம் இல்லை; தொழிற்சாலைகள்; வேலையில்லாத யாவருக்கும் வேலை கொடுக்கக்கூடிய புதிய புதிய தொழிற்சாலைகள், ஊசி முதல் கப்பல்வரை செய்யக்கூடிய பல்லாயிரக் கணக்கான தொழிற்சாலைகளைத் தமிழ்நாட்டில் அமைத்து, நாலுகோடித் தமிழ் மக்களில், பெண்கள், குழந்தைகள் தவிர மற்றெல்லாத் தமிழ் மக்களுக்கும் வேலை கொடுக்கவேண்டும்.

திருநெல்வேலி ஜில்லாவுக்குப் பழைய காலத்தில் துறைமுகமாக இருந்த கொற்கையிலும், தூத்துக்குடியிலும், இராமநாதபுரம் ஜில்லாவுக்குக் கிழக்கரையிலும், தொண்டியிலும், தஞ்சாவூர் ஜில்லாவுக்கு அதிராம்பட்டினம், கோடிக்கரை, நாகபட்டினம், காரைக்கால், காவிரிப்பூம் பட்டினம் முதலிய இடங்களிலும், தென்னாற்காட்டு ஜில்லாவுக்குக் கூடலூர், புதுச்சேரி முதலிய இடங்களிலும், செங்கற்பட்டு ஜில்லாவுக்குச் சதுரங்க பட்டினம், பழவேற்காடு முதலிய இடங்களிலும், பெரிய துறைமுகங்களும், சகல விதமான கப்பல் கட்டும் இடங்களும் ஏற்படுத்தினால் அந்தந்த ஜில்லாக்களில் உள்ள லக்ஷக்கணக்கான மக்களுக்கு நல்ல சம்பளத்தில் தொழில் கிடைக்கும்.

சேலம் ஜில்லாவில் இரும்பு ஏராளமாகப் பூமியில் இருந்தபோதிலும் உபயோகப் படுத்தப்படாமல் இருந்து வருகிறது. இந்த இரும்பை உபயோகித்து கடிகாரம், சைக்கிள், மோட்டார் கார் முதலியவைகள் செய்யும் தொழிற்சாலைகளை ஏற்படுத்தினால் பல்லாயிரக் கணக்கான தமிழ் மக்கள் பிழைப்பார்கள். மதுரை ஜில்லாவிலும் கோயம்புத்தூர் ஜில்லாவிலும் மேற்குப் புறத்திலிருக்கும் மலைகளில் பெய்யும் மழை நீரைத் தேக்கிவைத்து, அதிலிருந்து மின்சாரசக்தி உற்பத்தியாக்கி, எல்லா விதமான இயந்திரங்களையும் ஆலைகளையும் ஓட்டவைத்து ஏராளமான தமிழர்களுக்கு வேலை உண்டாக்கலாம். இதேபோல் திருச்சினாப்பள்ளி ஜில்லாவிலும் வட ஆற்காட்டு ஜில்லாவிலும் தகுந்த இடங்களில் சிமின்ட் செய்வது போன்ற பல தொழிற்சாலைகளைப் பற்பல இடங்களில் ஏற்படுத்தி வேலைப் பஞ்சத்தைத் தொலைக்கலாம்.

வேறு தேசத்தார்கள் தங்கள் நாட்டில் இதேவிதமான தொழிற்சாலைகளை ஏற்படுத்தி ஒருவனுக்கு நாள் ஒன்றுக்கு ரூபாய் 5 வீதம் சம்பளம் கொடுத்து வருகிறார்கள். அதே மாதிரி தொழிலைச் செய்கிற தமிழனுக்கு ரூபாய் 1, 2 சம்பளம் கொடுக்க முடியாதா? முன் காலத்தில் தமிழரின் கப்பல்கள் உலகத்தைச்சுற்றி வாணிபம் செய்து வந்தது போல், தமிழ் ராஜ்யம் வந்தால் மறுபடியும் செய்ய முடியாதா?

## நாமும் ஓர் வல்லரசு ஆகிடுவோம் வாரீர்.

தமிழ் நாடு ஒன்று படவேண்டும்; தமிழ் ராஜ்யம் வேண்டும்; தமிழர்கள் ஆளவேண்டும்; தமிழ் நாடு ஒரு வல்லரசாகவேண்டும்; என்று இவ்வாறு நாம் சொல்லும்போது வடநாட்டானுக்குக் கோபம் தீப்போல் வருகிறது. "உங்கள் தமிழ் நாடு மிகச்சிறியது;

அன்னியர்கள் உங்கள் ராஜ்யத்தை நசுக்கிவிடுவார்கள்'' என்று பயங் காட்டுகிறுன்.

உண்மையில் தமிழ் நாடு சிறிய தில்லே. மொத்தம் தமிழ் மக்கள் நாலு கோடிப் பேர்கள். ஆங்கிலேயரைவிட அதிகத் தொகையினர். தமிழர்கள் யாவரும் ஒன்றுசேர்ந்து தமிழ் ராஜ்யம் நடைபெறச் செய்தால், அன்னியர்கள் நம்மைக்கண்டு அஞ்சுவார்கள். நம்மை நெருங்கத் துணிவார்கள் என்ற பயம் வேண்டியதே இல்லே. இப்படத்தை நன்ருய்க் கவனித்துப் பாருங்கள்.




முப்பது லட்சம் ஜனத்தொகை கொண்ட ஐரிஷ்காரர்கள் இன்றைய தினம் சுயராஜ்யம் ஆண்டு வருகிருர் கள். அவர்கள் தேசம், பிரிட்டன் தேசத்துடன் (இப்போது தமிழ்நாடு இந்தியாவில் சேர்ந்திருப்பதுபோல) சேர்ந்திருந்த காலமெல்லாம் ஐரிஷ் பாஷை சீர்குலேந்து, அந்தப் பாஷை யை ஐரிஷ்காரர்கள்கூடப் பேசுவதற்கு வெட்கப்படும் நிலேயில் (இப்போது தமிழ் இருக்கும் நிலேயில்) இருந்தது. இன்னும் கொஞ்ச வருஷத்தில் பாஷை யே அழிந்துபோகும் என்று பயப்பட வேண்டிய நிலேமையில் இருந்தது.

ஆனல் ஐரிஷ்காரர்கள் தங்களுக்கு தனி ராஜ்யம் வேண்டுமென்று கிளர்ச்சி செய்து, சுயராஜ்யத்தைக் கைப்பற்றியவுடன், ஐரிஷ் ராஜ்யம் ஐரிஷ் பாஷையில் நடைபெற ஆரம் பித்தது. சட்டங்கள் அவர் கள் பாஷையில் ஏற்பட் டன. அவர்கள் பாஷையும் நிலேமையில் உயர்ந்து விளங்கிற்று. உலகத்தில் ஐரிஷ்காரர்களுக்கு மதிப்பு ஏற்பட்டது.

இப்போது ஓர் வல்லர சாக விளங்கும் துருக்கி தேசத்தில் $1\frac{1}{2}$ கோடி ஜனங் கள்தான் இருக்கிருர்கள். ஸ்பெயின் தேசத்தில் 2 கோடிப் பேர்கள் இருக் கிருர்கள். இந்தத் தேசங் களேப்போல் இரண்டு பங்கு வலிமையுள்ள ஓர் வல்லர சாக தமிழ் நாடு இருக்கக் கூடுமல்லவா?

## தமிழ் பெரிது.

தமிழ் மொழியின் முன்னேற்றத் திற்காக அல்லும் பகலும் உழைக்கும் அன்பர்கள் பலரை எனக்குத்தெரியும். அவர்கள் முயற்சிகளெல்லாம் வீணுகி வருவதும் எனக்குத் தெரியும். அவர்

களை நான் ஒரு கேள்வி கேட்க விரும்புகிறேன். ராஜ பாஷையாக, அரசாங்க பாஷையாக, சட்டசபையில் பேசப்படும் பாஷையாக, இல்லாத எந்த பாஷையாவது கௌரவத்தை அடைந்ததுண்டா? தமிழ் ராஜ்யம் ஏற்பட்டாலொழிய தமிழ் மொழி அடிமை மொழி யென்ற பெயரை ஒழிக்க முடியுமா?

நீங்கள் பல ஊர்களில் பார்த்திருப்பீர்கள். அன்னியர்கள் வந்து தமிழ் நாட்டில் பொதுக்கூட்டங்களில், ஆங்கிலத்திலோ, அல்லது வடநாட்டார் பாஷையிலோ பேசுகிறார்கள். அப்படி அன்னிய பாஷைகளில் பேசப்படுவதை வெட்கங்கெட்ட தமிழர்கள், தமிழில் மொழி பெயர்த்துச் சொல்லி தமிழர்கள் மத்தியிலேயே, தமிழை அடிமைப் பாஷையாக ஆக்குகிறார்கள். தமிழைக் கற்றுக்கொள்ளாது, அலட்சியம் செய்யும் அன்னியர்களுக்குத் தமிழ் நாட்டில் என்ன வேலை? அவர்கள் தங்களைத் தலைவர்கள் என்று சொல்லிக்கொண்டு தமிழருக்குப் புத்தி சொல்ல வருவது என்ன துணிச்சல்! இதைச் சகித்துக்கொண்டிருக்கும் மனப்பான்மை தமிழர்களிடமிருந்து என்று ஒழியும்?

அன்னிய நாட்டு மோகமும், வடநாட்டு மோகமும் ஒழியவேண்டும். தமிழருக்கு நிகரில்லை என்னும் நம்பிக்கை தமிழரிடம் பிறக்கவேண்டும். தமிழ்மொழி பெரிது; தமிழ் ரத்தம் பெரிது; தமிழ் நாடு பெரிது என்ற உணர்ச்சி ஓங்க வேண்டும். தமிழர்கள், மகம்மதிய மதமென்றாலும் சரி, கிறிஸ்தவ மதமென்றாலும் சரி, பிராமணரென்றாலும் சரி, பிராமணரல்லாதாரென்றாலும் சரி, எல்லோரும் ஓர் குலம், தமிழ்க்குலம் என்று உணர வேண்டும். அன்னியர்களின் பெயர்களை நம் பிள்ளைகளுக்கும், தெருக்களுக்கும், ஊர்களுக்கும் கொடுப்பதை நிறுத்தி, தமிழ்ப் பெயர்களைக் கொடுக்க வேண்டும். சங்கீதக் கச்சேரியிலும், சினிமா மேடையிலும், தமிழர்கள் கூடும் எல்லா இடங்களிலும் தமிழ் நாட்டை வணக்கம் செய்ய வேண்டும். தமிழையும், தமிழரையும் அவமதிப்போரை நாமும் அவமதித்தே தீரவேண்டும். தமிழரல்லாதார் உத்தரவுக்குத் தமிழர் பணிவதில்லை என்ற உறுதி தமிழர் எல்லோர் மனதிலும் உதிக்கவேண்டும். தமிழர் கூடும் கூட்டத்தில் ஆங்கிலத்திலோ, இந்தியிலோ பேசித் தமிழை அடிமையாக்குவதைத் தடுக்கவேண்டும்.

## தமிழ் ராஜ்யமே தெய்வ ராஜ்யம்.

தமிழ் ராஜ்யம் வந்தால் தமிழ்க் கொடி பறக்கும். தமிழர் ஆட்சி நிலவும். தமிழர்கள் தலைநிமிர்ந்து நடப்பார்கள், பிற ராஜாங்கத்தில் தமிழ்த் தூதுவர்கள் முதல் இடம் பெறுவார்கள். தமிழர் கப்பல் உலகத்தைச் சுற்றும். ஆகாயத்திலும், தரையிலும், தண்ணீரிலும் தமிழ் வீரர்களுக்கு நிகரில்லை என்று ஏற்படும்; தமிழ்ப் படைக்கு உலகத்தார் மரியாதை செய்வார்கள்.

தமிழ்க் கல்வி வளரும். தமிழே ராஜாங்க மொழியாக இருக்கும். அன்னியர்களும் தமிழைப் படிப்பார்கள். தமிழர்கள் இப்போது முப்பது வயதிற்குள் நசுங்கிச் சாவது நீங்கி 100

வயது வரை ஆரோக்கியத்துடன் இருப்பார்கள். கொள்ளை நோய்கள் நாட்டை விட்டு ஓடும்.

தமிழ் நாட்டில் "இல்லை" என்பது இல்லையாக ஒழியும். தொழிற்சாலைகள் பெருகும். செல்வம் வளரும். தூசி நிறைந்த தெருக்கள் மாறி, பளிங்கு போன்ற தெருக்களாகும். பெரிய வீடுகள் லண்டனிலும், பம்பாயிலும் மட்டுமல்ல, தமிழ் நாட்டிலும் பெருகும். நெற்றி வியர்வை நிலத்தில் விழ மண்வெட்டியால் நிலத்தை வெட்டி நான்கு அணு சம்பாதிப்பது போய், தமிழர்கள் இயந்திரங்களால் உழுது பன்மடங்கு அதிக ஊதியம் பெறுவார்கள். நிலவரிப் பாரம் நீங்கும். கண்ணீர் விட்டழும் தமிழ்த் தாயின் முகம் மாறிப் புன்னகை தவழும்.

## இது உண்மை.

தமிழ் ராஜ்யம் வரும் என்பது வெறுங் கனவில்லை. உண்மையாகவே வரப்போவது. தமிழ் ராஜ்யத்தைக் கொணர்வதற்குத் தமிழர்களே முன் வாருங்கள்! தமிழ் ராஜ்ய சங்கத்தில் சேருங்கள்! தமிழ் மொழியை வளருங்கள். இளந் தமிழர் சங்கங்களைக் கூட்டுங்கள்.

## தமிழ் ராஜ்யம் வாழ்க.

## தமிழ் ராஜ்ய கட்சியின் நோக்கங்கள்.

1. தமிழ்மொழி, தமிழ் இசை, தமிழ்க்கலை இவற்றை வளர்ப்பது.
2. தமிழ் நாட்டின் வறுமையைப் போக்குவதற்கு, தொழில் திட்டம் வகுத்து நிறைவேற்றுவது.
3. இளந்தமிழருக்குள் ஒற்றுமை, ஊக்கம், வீரம் உண்டாக்குவது.
4. தமிழ் இனம் ஒன்று என்பதைத் தமிழர்களுக்கு உணர்த்துவது.
5. தமிழ் நாட்டிலும், வெளி நாட்டிலும் தமிழர்கள் படும் கஷ்டத்தைப் போக்குவதற்கான பணி செய்வது.
6. அந்நியர்களுக்குத் தமிழ் நாட்டில் இருக்கும் ஆதிக்கத்தை ஒழிப்பது.
7. துண்டுபட்டுக்கிடக்கும் தமிழ் நாட்டை ஒன்றுசேர்த்து, தமிழ் ராஜ்யம் ஏற்படுத்துவது.
8. அப்படி ஏற்படும் ராஜ்யத்தை பிற நாட்டாரும் மதிக்கும் ஒரு வல்லரசாக ஆக்குவது.
9. இந்த நோக்கங்கள் கைகூடுவதற்கு வேண்டியவை எல்லாம் செய்வது.

# தமிழ் ராஜ்யம்.

1. தமிழரின் ராஜ்யம் ஆக்குவோம்—இனித்
தமிழகஞ் சிதைவதைத் தாக்குவோம்
தமிழகம் உலகத்தின் தாயகம்—இதைத்
தரணியோர் மதித்திடச் செய்குவோம் !

2. திருவிதாங் கூர்த்தமிழ்ப் பகுதியும்—கீழ்த்
தென்படும் புதுச்சேரி காரைக்கால்
அருந்தமிழ்ச் சித்தூர்யாழ்ப் பாணம்—இணை
ஆர்வுடன் ராஜ்யம் ஆக்குவோம் !

3. உலகத்தின் பற்பல நாட்டுக்கும்—நம்
உயர்தமிழ்த் தூதரைப் போக்குவோம்
அலகில் மதிப்புடன் தூதர்க்கும்—அவை
ஆர்வொடு பணிவதை நோக்குவோம்.

4. தமிழர் இனத்தூய்மை பேணுவோம் !—தூய
தமிழர் இரத்தமே காணுவோம் !
தமிழர் எழுகலே தரணியை—மீண்டும்
தகவுடன் காத்தலைக் காட்டுவோம் !

5. பல்வகை இயந்திரம் கூட்டுவோம்—தமிழ்
பாரின் முதன்மையை நாட்டுவோம் !
பல்வகைத் தொழில்களும் மின்வலி—கொண்டு
பாங்குடன் பல்பொருள் ஈட்டுவோம் !

6. 'தமிழர்தமிழ்விரதம் பூணுவோம்'—ஒரு
தமிழ்வல் லரசைநாம் காணுவோம்
அமிழ்தமெனுந்தமிழைப் பேணுவோம்—நம்
அருந்தமிழ்க் கலைவளம் காணுவோம்.

—"தமிழ் ராஜ்ய பாடல்கள்".

## நாட்டு வணக்கம்.

இசை : "எந்தையுந்தாயும்"

செந்தமிழ்க்கப்பல் திரைகடலெங்கும் செலுத்திய திந்நாடே—பலர்
சிந்தனையோங்கத் தமிழ்மன்றம் நாட்டித் திகழ்ந்ததும் இந்நாடே!—உயர்
வந்தனைகூறி மகிழ்ந்துல கோர்தினம் வந்ததும் இந்நாடே?—பெரும்
செந்தமிழ்வள்ளல்கள் தீந்தமிழ்போற்றிச் சிறந்தது மிந்நாடே!—இதை
"எந்தாய் நாடிது! எந்தாய் நாடிது!" என்று வணங்குவமே!—இதை
"எந்தாய் நாடிது! எந்தாய் நாடிது!" என்று வணங்குவமே!

**நண்பா,**

இப்புத்தகத்தைப் படித்தாய். தமிழ் நாடு துண்டு பட்டுக்கிடப்பது சரியில்லையென்று உன் மனதில்படுகிறதா? இத்துண்டுகள் ஒன்றுசேர்ந்து தமிழ் ராஜ்யம் ஏற்பட்டால் தமிழ் மொழிக்கும், தமிழருக்கும் உயர்வு உண்டாகும் என்று உனக்குத் தோன்றுகிறதா? அப்படியானால் சும்மா யிருக்க வேண்டாம். உன் சிநேகிதரிடம் உன் அபிப்பி ராயத்தைச் சொல். நீ இருக்கும் ஊரில் தமிழர் சங்கம் இருந்தால், அச்சங்கத்தில் "துண்டுபட்டுக் கிடக்கும் தமிழ் நாடு ஒன்றுபட்டுத் தமிழ்ராஜ்யம் ஏற்படவேண்டும் என்று இச்சங்கம் தீர்மானிக்கிறது" என்ற தீர்மானத்தைக் கொண்டுபோய் நிறைவேற்று. உன் ஊரில் தமிழ்ச் சங்கம் இல்லாதிருந்தால் தமிழ் ராஜ்ய சங்கம் ஏற்படுத்த உடனே முயற்சி செய். உன் நற்செயல்களை சி. பா. ஆதித் காவது, "தமிழன்" காரியாலயத்துக்காவது எ தெரியப்படுத்து.

T2
R00

**தமிழ் வாழ்க! வீரத் தமிழர் வாழ்க!! தமிழ் ராஜ்யம் வாழ்க!!!**

ஈசன் பிரஸ், வடக்காவணி மூலவீதி, மதுரை.